

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலை மேற்கு ஒன்றியம், செல்லப்பம்பாளையம், தேவனூர்புதூர் பகுதிகளில் இருந்து மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், ஒன்றிய கழக செயலாளர் தி.செழியன், பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.பாபு, ஒன்றியக்குழு பெருந்தலைவர் மகாலெட்சுமி முருகன், துணைத் தலைவர் கே.எ.சண்முகவடிவேல் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில்

# புவியியல் - சுரங்கத்துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஜூலை 14-

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையைச் சார்ந்த அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

புவியியல் மற்றும் சுரங்கத்துறையைச் சார்ந்த அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.07.2023) நடைபெற்றது.

இந்நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரையில் கனிம வருவாய் ரூ.354.28 கோடி ஈட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் இனி வரும் மாதங்களில் இலக்கினை எய்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கினார். மேலும், கனிம வருவாய் விபரங்களை மாவட்ட வாரியாக கேட்டறிந்த அமைச்சர் அவர்கள் கனிம வருவாயை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கை குறித்த அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டித்தர அனைத்து அலுவலர்களும் முழு ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும் எனவும், மாவட்ட மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்கள் முனைப்புடன் செயல்படவேண்டும் எனவும், சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டி எடுப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் அப்பகுதிகளை கள ஆய்வு மேற்கொண்டு, விதிகளின் படி கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கினார். மேலும், நிலுவையிலுள்ள வருவாய் இனங்களில் கவனம் மேற்கொண்டு நிலுவை தொகையினை விரைந்து வசூலிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் தகுதி வாய்ந்த கிரானைட் மற்றும் கல்குவாரிகளை துரிதமாக ஏலத்திற்கு கொண்டு வந்து கனிம வருவாயினை அதிகரிக்க அறிவுறுத்தினார். வாகனம் கைப்பற்றுகையை ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட அலுவலர்களும் குறைந்த பட்சம் மாதத்திற்கு 10 வாகனங்களை கைப்பற்றிடவும், அனுமதியின்றி செயல்படும் குவாரிகளை கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், கனிம திருட்டினை முற்றிலும் தடுத்து மாநில அரசுக்கு அதிக அளவில் வருவாய் ஈட்டி தருமாறு கேட்டுக்கொண்டார்.

இவ்வாய்வு கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்து துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை (முகூபொ) பணிந்திர ரெட்டி, சிறப்பு செயலாளர் திருமதி பூஜா குல்கர்னி, மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் இல.நிர்மல் ராஜ், மற்றும் துறையின் உயர் அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

## கோவை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில்

# 5 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் வழங்கினார்!

கோவை, ஜூலை14-

முத்தமிழ் அறிஞர் செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டக் கழகம் மற்றும் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில், நேற்று முன்தினம் (12-07-2023) மாலை 6.00 மணியளவில், ராஜவீதி தேர்நிலைத் திடலில்,

நடைபெற்ற விழாவில், கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு, தலைமை தாங்கி, 5000 பொதுமக்களுக்கு, தையல் இயந்திரங்கள், புடவைகள், உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

பெரியகடைவீதி பகுதி -1 செயலாளர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் மார்க்கெட் எம்.மனோகரன் வரவேற்புரையாற்றினார்.

கோவை மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகள் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாநகர் மாவட்டப் பொருளாளர் எஸ். எம்.பி.முருகன்,

பகுதிச் செயலாளர்கள் இராமநாதபுரம் பகுதி ப.பசுபதி, பெரியகடை வீதி பகுதி -1 வி.ஐ.பதுருதீன், காந்திபுரம் பகுதி ஆர்.எம்.சேதுராமன், பொதுக்குழு உறுப்பினர்கள் மா.மகுடபதி, வெ.ந. உதயகுமார், மு.மா.ச.முருகன், ச.குப்புசாமி, ஜோ. நோயல் செல்வம், ஆடிட்டர் சசிகுமார், சரஸ்வதி புஷ்பராஜ் , வட்டக்கழகச் செயலாளர்கள் 70 வது வார்டு ஆ.சுரேஷ் நாராயணன், 69 வது வார்டு ப.ப.சிவகுமார், 80 வது வார்டு நா.தங்கவேல், பகுதிக் கழக நிர்வாகிகள் பி. அருண்குமார், பழக்கடை முத்து முருகன், எம்.சீனிவாசன், மு.புவனேஸ்வரி, எம்.நாகராஜன், எல்.கனகராஜ், ரா.முருகேஷ், சு. பாலன், ப.ராஜேந்திரபிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைக்கழக நிர்வாகிகள் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் பி.ஆர்.அருள்மொழி, தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, தீர்மானக்குழு மு.இரா.செல்வராஜ், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, மாநில மாணவரணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், மாநில தொழிலாளர் அணி துணை செயலாளர் தமிழ்ச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன்

தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சம்பத், பகுதிக்கழகச் செயலாளர்கள் மா.நாகராஜ், பரணி கே.பாக்கியராஜ், அஞ்சுகம் பழனியப்பன், நிலைக் குழுத் தலைவர்கள் முபசீரா பதுருதீன், கோவை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மெட்டல் ராஜா(எ)ராஜாமணி, சு.தனபால், வழக்கறிஞர் ஆர்.விஜயராகவன்,

மாமன்ற உறுப்பினர்கள் சு.சர்மிளா, இரா. வித்யா ராமநாதன், முனியம்மாள் பாலமுருகன், கமலாவதி போஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இரா. தனபால், அக்ரிபாலு, ஆர். கே.சுரேஷ், கோவை அபு, ஏ.சாமி தங்கம், சீனிவாசன், நா.பாபு, கனிமொழி, துணை அமைப்பாளர்கள்,

தலைமைக் கழகப் பேச்சாளர் அதிரடி அல்தாப், வட்டக்கழகச் செயலாளர்கள் டவுன் பா.ஆனந்தன், நா.தங்கவேல், கே.ராமநாதன், எஸ்.போஸ், நா.சண்முகசுந்தரம், சு.பாலமுருகன், ஏ.அப்பாஸ், விஜயகுமார், கே.ஆனந்தகுமார், கராத்தே வீரமணி, ஜெபமாலை தாஸ், பகுதிக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

81 வது வட்டக்கழகச் செயலாளர் டவுன் பா. ஆனந்தன் நன்றி கூறினார்.



கோவை மாநகர் மாவட்டம் மற்றும் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் ஐந்தாயிரம் பேருக்கு நல உதவிகளை மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் வழங்கினார்.

## இராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறிப்பும்

# பா.ஜ.க. -மோடிகளின் அவதூறுப் பேச்சுகளும்!

குற்றவியல் அவதூறு வழக்கில் சூரத் கீழமை குற்றவியல் நீதி மன்றம் காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் இராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டு சிறை தண்டனைக்குத் தடை விதிக்க மறுத்து அவரின் மேல்முறையீட்டு மனுவை குஜராத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இராகுல் காந்தி மீது நாடு முழுவதும் பத்து குற்ற வழக்குகள் உள்ளன என்றும், இரண்டு ஆண்டுகள் தண்டனை விதித்த கீழமை நீதிமன்ற உத்தரவு, சட்டப்படி சரியானதுதான் என்றும் ஆகவே, தடை விதிக்க வேண்டிய காரணம் எழவில்லை என்றும் , குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி ஹேமந்த் பிரச்சத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

வைர வியாபாரியான நீரவ் மோடி இந்திய வங்கிகளில் பல கோடி ரூபாய் கடன் பெற்று அவற்றைத் திருப்பச் செலுத்தாமல் வெளிநாட்டிற்குச் தப்பிச் சென்றார். ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய தொழிலதிபரும், ஐபிஎல் முன்னாள் தலைவருமான லலித் மோடியும் தண்டனைக்கு அஞ்சி வெளிநாட்டுக்குத் தப்பினார். இந்நிலையில் மக்களவைத் தேர்தல் நடைபெற்ற போது, கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று கர்நாடக மாநிலம் கோலாரில் தேர்தல் பேரணிப் பிரச்சாரக் கூட்டத்தில் வாக்குச் சேகரிக்கக் கலந்து கொண்ட இராகுல் காந்தி பேசினார். அப்போது, ''எனக்கு ஒரு கேள்வி எழுகிறது. ஏன் இந்தத் திருடர்கள் அனைவரும் மோடி, மோடி, மோடி எனப்பெயர் பெற்றுள்ளனர். நீரவ் மோடி ,லலித் மோடி, நரேந்திர மோடி இன்னும் சிறிது தேடினால் கூடுதலாக பல மோடிகள் வெளிவருவர்.

இப்படி இராகுல் காந்தி கிண்டலாகத்தான் கேள்வி எழுப்பிப் பேசினார். ஆனால், இராகுலின் இந்தப் பேச்சால் நரேந்திர மோடி மட்டுமல்லாது, ஒட்டுமொத்த மோடி சமூகத்தையே களங்கப்படுத்தி விட்டதாகக் கூறிப் பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினரும், குஜராத் முன்னாள் அமைச்சர் பூர்னேஷ் மோடி என்பவர் புகார் அளித்திருந்தார்.

அத்துடன், மேலிட வற்புறுத்தலால் அவர் சூரத் மாவட்டக் குற்றவியல் நீதி மன்றத்தில் (16–04–2019) அன்று வழக்கும் தொடுத்து இருந்தார். இந்தியத் தண்டனைச் சட்டம் 499, 500 ஆகிய பிரிவுகளில் இராகுல் காந்தி மீது 2021 இல் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடைபெற்றது. நீதிமன்றத்திற்கு நேரில் வந்த இராகுல் காந்தி (24–06–2021) அன்று தனது விளக்கத்தை அளித்தார்.

அந்நாளில் ஏ.என்.தவே என்பவர் நீதிபதியாக இருந்து விசாரித்து வந்தார். இதற்கு இடையில் புகார்தாரர் பூர்னேஷ் மோடி வழக்கின் விசாரணையை நிறுத்துமாறு குஜராத் உயர்நீதிமன்றத்தில் தடையாணை கேட்டு மனு தாக்கல் செய்தார். வழக்கை நிறுத்த தடையாணையும் (07–03–2022) அன்றுஉயர் நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. இதில் வேடிக்கை என்ன வெனில் குற்றம் சுமத்தப்பட்டவர் தான் வழக்கின் விசாரணையை நிறுத்துவதற்கு நீதிமன்றத்தில் மனு போடுவார். ஆனால், வழக்குப் போட்டவரே விசாரணையை நிறுத்த மனு போட்ட வினோதமான செயல்கள் அப்போது நடைபெற்றது.

குஜராத் கலவரத்தின் போது, மோடி, அமித்ஷா போன்ற கூட்டாளி வகையறாக்களுக்குத் தொடர்பு இருந்தது என்பதை இலண்டன் பி.பி.சி.செய்தி நிறுவனம் வெளியிட்ட ஆவணப்படம் இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. மற்றும் மோடியின் நெருங்கிய கூட்டாளியான அதானியின் 20,000 கோடி ரூபாய் மோசடி குறித்த ஹிண்டன் பர்க் ஆய்வறிக்கை வெளியானதைத் தொடர்ந்து இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி வட்டாரம் வெளிநாட்டுச்சதி என்றெல்லாம் வழக்கு போட்டாது. இப்படிப்பட்ட ஆதாரங்களை எல்லாம் மோடிக்கும் அவருடைய கார்ப்பரேட் கூட்டாளியான அதானி போன்றோரின் மோசடிகளைக் கடந்த பிப்ரவரி மாதம், பாராளுமன்றத்தில் சில புகைப்படங்களைக் காட்டி ,அடுக்கடுக்கான வினாக்களை எழுப்பியிருந்தார் இராகுல் காந்தி.

இந்நிலையில் தான்,,குஜராத் உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெற்று, ஏறத்தாழ ஓராண்டு கிடப்பில் போடப்பட்டிருந்த இந்த வழக்கானது,கடந்த 2023 பிப்ரவரி 21 க்கு பிறகு, திடீரென்று உயிர் பெற்றது வியப்பிற்கு உரியது. உயர் நீதிமன்றத்தைப் பூர்னேஷ் மோடி(16022023) அன்று அணுகித் தடையாணையை விலக்கிக் கொள்ள வேண்டப்பட்டதால், அதன் படி பெறப்பட்டது. இதற்கிடையில், நீதிபதி ஏ.என்.தவே மாற்றலாகி அந்த இடத்தில் எச்.எச்.வர்மா என்பவர் புதிய நீதிபதியாக பொறுப்பேற்று விசாரணை தொடர்ந்தார்.

புதிய நீதிபதி எச்.எச் வர்மா பொறுப்பேற்றவுடன் வழக்கு விசாரணை (27–2– 2023) அன்று மீண்டும் தொடங்கியது வேக வேகமாக ஒரு மாதத்திற்குள்ளாகவே விசாரணை முடிக்கப்பட்டு கடந்த மார்ச் 23 அன்று,வழங்கிய தீர்ப்பில் இராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், பதினைந்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து கூறப்பட்டது. மூன்று ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கில் இவ்வளவு வேகவேகமாக நடத்த வேண்டிய அரசியல் விளையாட்டு என்ன என்ற கேள்வியை சட்டவல்லுநர்கள் மற்றும் அரசியல் நோக்கர்கள் கடுமையான விமர்சனம் செய்து வருகிறார்கள்.

இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 504 கீழ் இராகுல் காந்தியைக் குற்றவாளி என அறிவித்த அதே சூரத் ஜூடிசியல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில், தனக்கு உடனடியாகப் பிணை வழங்கப்பட வேண்டும் என்று இராகுல் காந்தி முறையிட்டதால், நீதிபதி எச்.எச். வர்மா,அவருக்கு 30 நாட்கள் பிணையும் வழங்கியதுடன், தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்யலாம் எனவும், அதுவரை தண்டனையை நிறுத்தி வைப்பதாகவும் அறிவித்தார்.

வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் போது வருகை தந்திருந்த இராகுல், நறுக்கொலி ( ட்விட்டர்) பதிவில், மகாத்மா காந்தியின் கருத்தை மேற்கோள்காட்டிச் செய்தி வெளியிட்டு இருந்தார். “உண்மை; அகிம்சை ஆகியவற்றை எனது மதம் அடிப்படையாகக் கொண்டது. உண்மையே என்| கடவுள். அந்தக் கடவுளை அடையும் வழியே அகிம்சை” என அதில் குறிப்பிட்டு இருந்தார்.

2013 ஆம் ஆண்டு ஜூலை 10 அன்று கேரள வழக்கறிஞர் லில்லி தாமஸ் வழக்கில் உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பின் அடிப்படையில்,மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 திருத்தப்பட்டது. ( Representation of the People Act 1951 )section 8 (3) படி சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய மக்கள் பிரதிநிதிகள் யார் ஒருவரும், இரண்டு ஆண்டுக்கு மேல் தண்டனை பெற்றிருந்தால், அவர் பதவி இழப்புக்கு உள்ளாவர். மேலும், தண்டனைக் காலம் முடிந்த பின்னரும் அவர் 6 ஆண்டு காலம் தேர்தலில் நிற்க முடியாது.

தண்டனை அறிவிக்கப்பட்டதுமே துரிதமாக நாடாளுமன்ற மக்களவைச் செயலாளர் உத்பல் குமார் சிங் ஒரு அறிக்கை வெளியிட்டு “குற்றவியல் வழக்கில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் இராகுல் காந்திக்கு எதிராக சூரத் நீதிமன்றம் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. எனவே ,மக்கள் பிரதிநிதித்துவச சட்டம் 1951 பிரிவு 102 (1 ) (e),இன்படி கேரளாவின் வயநாடு தொகுதி மக்களவை உறுப்பினர் எனும் நிலையில் இருந்து இராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்படுகிறார். அவரது தகுதி நீக்கம் தீர்ப்பு வெளியான நாளில் ( 23 03 2023) இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கவிஞர் தமிழ்தாசன்

தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்

வருகிற 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அவர் நிற்காதபடிஅரசியல் சூழ்ச்சியோடு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மோடி அரசு வழக்கின் தீர்ப்பைக் காட்டி, இராகுல் காந்தியிடமிருந்து பறித்து விட்டது.

இராகுல் எம்.பி .பதவி தகுதி நீக்கத்தின் விளைவாக பத்திரிக்கையாளர்கள் கேட்டதற்கு, “என் பெயர் சாவர்க்கர் கிடையாது. என் பெயர் காந்தி.. காந்தி ஒருபோதும் மன்னிப்பு கேட்கவில்லை (“ My name is not Savarkar; Gandhi does not offer apology”), என் மீதான அவதூறு சட்டபூர்வமான விடையம் என்பதால், கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. நாட்டில் ஜனநாயகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. அதற்கான உதாரணங்கள் அவ்வப்போது வெளிப்பட்டு வருகின்றன என்று நெஞ்சினை நிமிர்த்தி கூறினார். மோடியின் பீதியடைந்த இந்த எதிர்வினையால், எதிர்க்கட்சிகள் அதிகம் பயனடையும் .உண்மை வெளிவரும் என்று அவர்கள் பீதி அடைந்துள்ளனர். இதன் மூலம் மிகப்பெரிய அந்தஸ்தை எதிர்க்கட்சியுடன் ஒப்படைத்துள்ளனர். இப்போது மக்கள் மனத்திலும் கேள்வி எழுந்துள்ளது . அதானி ஊழல்வாதி என்பது அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்டவரை பிரதமர் மோடி காப்பாற்ற ஏன் துடிக்கிறார்? என்பதுதான் அந்த கேள்வி: “என இராகுல் காந்தி பதிலளித்தார்.

எம்.பி. பொறுப்பைப் பறித்த செய்தியைக் கேட்டதும், தமிழக முதல்வரும், தி.மு.க தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், இராகுலிடம் தொடர்பு கொண்டு பேசினார். “இராகுல் காந்தியைப் போன்ற தலைவரை அவரது பேச்சுக்காக ஆதிக்க சக்திகள் தண்டித்துள்ளது. மிகவும் வருந்தத்தக்கது. தான் தவறான எண்ணத்துடன் கூறவில்லை என்று அவரே விளக்கம் அளிக்கப்பட்ட பிறகும்,அவரது பேச்சுக்காக தண்டிப்பது; இதுவரை நாம் பார்த்திராத ஒன்று. எதிர்க்கட்சிகளைக் குறிவைத்து வந்த பாஜகவின் போக்கு இப்போது ஜனநாயக உரிமைகளையே காலில் போட்டு நசுக்குவதில் வந்து முடிந்திருக்கிறது. இத்தகைய அக்கிரமங்கள் விரைவில் முடிவுக்கு வரும். இராகுல் காந்தியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி அவருக்கு எனது ஆறுதல் தெரிவித்து இருக்கிறேன். இறுதியில் நீதியே வெல்லும் என்று உறுதியாக நம்புகிறேன்”

இதற்கிடையில் அதானியின் ரூபாய் 17 லட்சத்து 80,000 கோடி பங்குச் சந்தை முறைகேடு தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தியும், இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் இராகுல் காந்தி எழுப்பியதால் தான் மோடி அரசு அவருடைய எம்.பி.பதவியை நீக்கி மேற்கொண்ட அரசியல் பழிவாங்கலையும் கண்டித்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் பல நாட்களாகக் கேள்விகள் எழுப்பப்பட்டுப் போராடிய போதும் பா.ஜ.க.ஆட்சி எந்தவித பதில் தராததால், முடக்கப்பட்ட வரலாறு உண்டு.

நீதிமன்றம் பிணை வழங்கி 30 நாள்கள் தந்து இருந்தும் ,அதற்கு காத்திராமல் நாடாளுமன்றத்தின் செயலகத்தை ஏவி இராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறித்தது மோடி அரசின் பழிவாங்கும் பாசிச போக்காகும்.

2023 மார்ச் 24 அன்று எம்பி பதவி பறித்தவுடன், ஏப்ரல் 2 அன்று சூரத் அமர்வு நீதிமன்றத்தில் இராகுல் முறையீடு செய்தார். ஆனால் ஏப்ரல் இருபதாம் தேதி இராகுலுக்குப் பிணை வழங்கியும், தண்டனைக்குத் தடை விதிக்க மறுத்தும் அமர்வு நீதிமன்றம் உத்தரவு போட்டது. இதை எதிர்த்து ஏப்ரல் 25ஆம் தேதி உயர் நீதிமன்றத்தில் இராகுல் மேல்முறையீடு செய்தார். குற்ற அவதூறு வழக்கில் வழங்கிய இரண்டு ஆண்டு தண்டனையை நிறுத்த கூறியும் வழக்கை தள்ளுபடி செய்யக் கூறியும், அதுவரை கீழமைக் குற்றவியல் நீதிமன்றத் தீர்ப்புக்குத் தடை விதிக்க வேண்டும் என குஜராத் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்த இராகுல் காந்தியின் மனுவையும் தள்ளுபடி செய்துள்ளது.

குஜராத் உயர்நீதிமன்றம் ஜூலை 7 அன்று மனுவைத் தள்ளுபடி செய்ததோடு,வழக்கில் தொடர்பில்லாத சில கருத்துக்களை நீதிமன்றம் கூறியுள்ளது. சட்டத்தில் இல்லாத அம்சங்களைக் குறிப்பிட்டுத் தண்டனைக்குத் தடை கோர இராகுல் முயலகிறார். அளிக்கப்பட்ட தண்டனைக்கு தடை விதிக்க வேண்டும் என்பது சட்டம் அல்ல; விதிவிலக்கு :அரிய வழக்குகள் தான் இந்த விதிவிலக்கு பொருந்தும். இராகுல் மீது 10 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த வழக்கு தொடுக்கப்பட்ட பிறகு வீர சாவர்க்கரை அவதூறாகப் பேசியதற்காக பூனே, லக்னௌ நீதிமன்றங்களில் இராகுல் மீது வழக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த சூழலில் இராகுலின் தண்டனைக்குத் தடை விதிப்பது அவருக்கு எதிராக வழக்கு கொடுத்தவருக்கு செய்யப்படும் அநீதியாகும். சட்டப்படி சரியான உத்தரவை விசாரணை நீதிமன்றம் வழங்கி உள்ளது. இதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை. ஆகையால், இராகுல் மேல்முறையீட்டு மனு மீது அமர்வு நீதிமன்ற நீதிபதி விரைந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் இராகுலின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது” என்று நீதிபதி ஹேமந்த் பிரச்சக்தமது தீர்ப்பில் கூறியுள்ளார். இப்பொழுது உச்ச நீதிமன்றம் சென்று மேல்முறையீடு செய்ய இராகுல் காந்தி மேற்கொண்டு வருகிறார்.

கீழமைநீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஏற்கெனவே, மோடி அமித்ஷா மீது உள்ள வழக்கிற்காக வாதாடிய வழக்கறிஞர் ஆவார் என்றுவிமர்சனம் செய்யப்படுகிறது.

இந்நிலையில், கிரிமினல் அவதூறு வழக்கில் குற்றவாளி என்று இராகுல் காந்தியின்அரசியல் வாழ்க்கையையே அஸ்தமிக்கச் செய்யும் வகையில் தீர்ப்பளித்த சூரத் தலைமை ஜூடிசியல் மாஜிஸ்ட்ரேட் ஹரிஷ் ஹஸ் முக்பாய் வர்மா (எச். எச். ஹாரிஸ்)உட்பட 68 கீழமை நீதிபதிகளின் பதவி உயர்வுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது (12–05–2023). உயர் நீதிமன்றம் வழங்கிய பதவி உயர்வு பட்டியல் மற்றும் மாவட்ட நீதிபதிகளுக்குப் பதவி உயர்வு வழங்கி குஜராத் மாநில அரசு பிறப்பித்த உத்தரவு சட்ட விரோதமானது என்றும்,இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணானது என்றும் கூறி உச்ச நீதிமன்றம் பதவி உயர்வு பட்டியலை நிறுத்தி வைப்பதாகவும் பதவி உயர்வு பெற்றவர்கள் பதவி உயர்வுக்கு முன் அவர்கள் வகித்து வந்த அசல் பதவிக்குத் திரும்ப வேண்டும் என்று உத்தரவிட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி ஏப்ரல் 18 அன்று எஸ்எஸ் வர்மா உட்பட 68 பேருக்கும் பதவி உயர்வு வழங்குவதற்காக குஜராத் அரசு வெளியிட்ட அரசாணை உள்நோக்கம் உள்ளது என்றும், இது உச்ச நீதிமன்றத்தையும் குஜராத் அரசு மதிக்காத போக்கு என்றும் நீதிமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்த காரணத்தால் இந்த பதவி உயர்வை நிறுத்தி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இராகுல் காந்தி பேசியது அவதூறு என்றால்,காங்கிரஸில் இருந்த பொழுது நடிகை குஷ்பு “நீரவ் மோடி மற்றும் லலித் மோடியின் ஊழல்களைக் குறிப்பிட்டு மோடி என்றால் ஊழல் என அகராதியில் அர்த்தத்தையே மாற்றம் செய்ய வேண்டும் “என ட்விட்டரில் கருத்து தெரிவித்திருந்தார். அவர் இப்பொழுது பா.ஜ.க.வில் ஐக்கியம் ஆகி அரசு சம்பளம் வாங்கும் பொறுப்பில் இருக்கிறார். அவர் மீது எந்த வழக்கு பாயும்?

தன்னைச் சூர்ப்பனகை என்று இழிவு படுத்தி மோடி பேசியதைப் புகார் கொடுத்தால், பிரதமர் மோடி மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுப்பார்களா? என்று காங்கிரஸில் இருக்கும் தலைவர் ரேணுகா சவுத்ரி குற்றம் சாட்டியுள்ளார்.

அதைப்போல குஜராத் முதல்வராக இருந்த மோடி அவர்கள் இராகுல் காந்தியைக் “கலப்பு கன்றுக் குட்டி” என்றும் ,சோனியா காந்தியை” ஜெர்சி பசு” என்றும் ,இழிவுப் படுத்தி மிக மிகக் கேவலமாகப் பேசினார். அவர் மீது வழக்குப்பதிவு செய்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தித் தண்டனை வாங்கித் தருவார்களா?

காங்கிரசைச் சார்ந்த சசிதரூர் என்பவரின் மனைவியை”ரூ50 கோடி பெறுமான பெண் நண்பர் “என மிக மோசமாக மோடி பேசினார் என்று குறிப்பிட்டாரா? இல்லையா? இப்படி அவதூறு பேசிய மோடி மீது என்ன வழக்கு பாயும்?

இராகுல் லண்டன் சென்றிருந்த போது மக்கள் அவை விதிமுறை 223 படி ஏற்புடையதல்லை; இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும், இறையாண்மைக்கும் ஊறு விளைவிக்கும் வகையில் இராகுல் காந்தி பேசியதற்காக அவருடைய எம்.பி .பதவியை ஏன் பறிக்கக் கூடாது? இதற்காகச் சிறப்புக் குழு அமைக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தலைவருக்கு மனு ஒன்றை அளித்திருந்தது பிஜேபி எம்பிக்கள் குழு ‘ஆனால் அதே நேரத்தில் மோடி பல்வேறு நாடுகளில் இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகளை பற்றியும் பல்வேறுஉண்மைக்கு மாறான ஆர்.எஸ்.எஸ் சித்தாந்த பாசிச போக்குகளையும் பேசினாரே... அதற்கு என்ன விடை அளிக்கப் போகிறார்கள்?

பாஜக அரசியல் சதிக்குக் கட்சியின், தொண்டன் அஞ்ச மாட்டான்; இராகுல் காந்தி எப்போதும் உண்மைக்காக போராடிவருகிறார்: இனியும் தொடர்ந்து போராடுவார். மோடி அரசின் மேற்பார்வையில், லலித் மோடி ,நீரவ் மோடி, மெகுல் சோக்சி, விஜய் மல்லையா, ஜதின் மேத்தா போன்றவர்கள் பொதுப்பணத்தைக் கொள்ளையடித்து விட்டு, நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்பது தான் உண்மை. ஆனால் இதைக் கேட்ட இராகுல் காந்தி போராளிக்கு பதவிப்பறிப்பும் சிறையும்தான் பரிசா? என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பி உள்ளார்.

காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தியின் விவகாரத்தில், சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறைச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்பது எந்த ஒரு ஜனநாயக நாட்டின் அடிப்படையாகும் .அந்த வகையில் இந்திய நீதிமன்றங்களில நடைபெறும் வழக்கை உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம் என்று அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளின் வெளியுறவுத் துறைகள் அறிவித்திருக்கின்றன. இப்படி வெளிநாடுகள் கூட மோடி ஆளும் இந்திய நாட்டின் ஜனநாயகத்தைக் கேலி பேசி வருகின்றன.

நீதிக்குத் தண்டனையா?சர்வாதிகாரிகளின் கைகளில் செங்கோல் தண்டமா?

சர்வாதிகாரம் காட்டுத்தீ; ஜனநாயகம் வீட்டு விளக்கு” என்றார் அண்ணா.

ஆம் சர்வாதிகாரம் எனும் காட்டுத்தீ மோடி ஆளும் இந்திய நாட்டில் பரவி எரிந்து கொண்டிருக்கிறது....